RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1958

OPEN ACCESS

# திருக்குறளில் அரசியல் சிந்தனைகள் சங்கத் தமிழ் நூல்களுடன் ஒப்புமைப் பார்வை

**வீ. ரஞ்சித் [அ, *], பொன். கதிரேசன் [அ]**

[அ] தமிழாய்வுத் துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), மேலைச்சிவபுரி-622403, தமிழ்நாடு, இந்தியா

# Politics in Thirukkural and a Comparative view with Tamil Texts

**V. Ranjith [a, *], Pon. Kathiresan [a]**

[a] Department of Tamil, Ganesar Senthamil College, (Affiliated to Bharathidasan University), Melaisivapuri-622403, Tamil Nadu, India

* Corresponding Author: umaponkathir@gmail.com

Received: 15-09-2022
Revised: 03-11-2022
Accepted: 26-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Thirukkural is the primary comprehensive guide to politics. From monarchy to populism, one can know the excellence of government through Thirukkural. In Thirukkural, sovereignty, education, incompetence, lack of knowledge, condemnation, tyranny, perspective, motivation, personality, organization, strategy, ministry, mission, identification, friendship, fire, basket friendship, genius, wisdom, Periyar's infallibility, womanizing, snobbery and other political ideas are explained very well. All these are explained in this article in comparison with political ideas.

**Keywords:** Thirukkural, Tamil Texts, Motivation, Perspective, Education

## முன்னுரை

மனிதன் உலகத்தில் நிலையாக வாழ்வதற்கு ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குச் சொன்ன அறிவுரை விளக்கம்தான் திருக்குறள். 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களில் பல்வேறு இடங்களில் அரசியல் சமுதாய மேம்பாட்டுக்காக பல்வேறு சிந்தனைகளை அறியமுடிகின்றது. அதனால்தான் உலக மொழிகளில் பலவற்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப் பெற்று உலகளாவிய பெருமையைப் பெற்றுள்ளது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட திருக்குறளின் அரசியல் சிந்தனைகளோடு நாலடியார், புறநானூறு, பதிற்றுப்பத்து, நான்மணிக்கடிகை முதலிய நூல்களில் உள்ள அரசியல் சிந்தனைகளைக் குறிப்பிட்டு விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது (Subramaniyan, 2007).

## திருக்குறளும், நாலடியாரும் கூறும் அரசியல் சிந்தனைகள்

திருக்குறளில் பொருட்பால் அரசியல் பகுதியில் 25 அதிகாரங்களில் அரசியல் சிந்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அங்க இயலில் 32 அதிகாரங்களில் அரசியல் சார்ந்த கருத்துக்கள் விளக்கம் தரப்பட்டுள்ளன. நாலடியாரில் பொருட்பால் அரசியலில் கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்கள், பெரியாரைப் பிழையாமை, நல்லினம் சேர்தல், பெருமை, தாளாண்மை என்னும் அதிகாரங்களில் அரசியல் சிந்தனைகள் காணப்படுகின்றன. திருக்குறளில் கல்வி என்னும் அதிகாரத்தில் தூங்காமைக் கல்வி என்று போற்றி இறைமாட்சிக்குப் பின்பு கல்வி அதிகாரத்தை அமைத்துள்ளார் (Parimelalhagar, 2001).

### அரசன் கற்கவேண்டிய நூல்களும் அதன்படி நிற்றலும்

அரசியல் என்னும் இயலில் கல்வி அதிகாரத்தை வைத்ததன் நோக்கம் என்னவெனில் சிறந்த கல்வியைப் பெற்றவராக அரசன் திகழ வேண்டும் என்பதாகும். அதாவது அறநூல், நீதிநூல் முதலியவற்றின் கல்வியறிவை அரசன் பெற்றிருக்க வேண்டும்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

கற்கப்படும் நூல்களைப் பழுது இல்லாமல் கற்க வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் உணர்ந்து வாழும்படி கற்க வேண்டும். நிற்றல் என்பது நிலைத்த வாழ்க்கையைப் பெறுவதற்குக் கல்விக் கற்ற படி நின்று வாழ வேண்டும் என்பதாகும். இதனை நாலடியார் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 2001).

"கருமமும் உள்பட போகமும் துவ்வாத்

தருமமும் தக்கார்க்கு செய்யா ஒரு நிலையே"

பொருளும் அதன் வழி இன்பமும் அதன்வழி அறமும் செய்து வெற்றி பெறுவதே சிறந்த வாழ்க்கை என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. அரசன் சிறந்த நூலைக் கற்று அதன்படி நின்று நிலைத்த வாழ்க்கையை வாழ்வதற்கு முன்னோடியாகத் திகழ வேண்டும் என்பதைப் பரிமேலழகர் உரை வழி அறிய முடிகின்றது (Subramaniyan, 2007).

### அழிவில்லாத செல்வம் கல்வி ஒன்றே

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். இதற்கு ஒப்பான செல்வம் வேறு எதுவும் இல்லை என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதனை,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றையவை"

குறிப்பிடுகின்றது (Parimelalhagar, 2001). மாடல்ல என்னும் ஒரு கருத்தைக் கொண்டு நாலடியார் சிந்தனையில் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

நாலடியாரில் தந்தையின் கடமை பற்றிப் பேசுகின்ற பொழுது கல்வி அறிவுகள் யாராலும் திருடப் படாது கேட்போருக்குக் கொடுப்பதால் குறைவுபடாது. இதனை,

"எச்சம் என ஒருவன் மக்கட்கு செய்வன

விச்சை மற்று அல்ல பிற"

இங்கே 'விச்சை' என்றால் 'வித்தை' என்று பொருள். அதன் வேர்ப் பொருள் அறிவு ஆகும். ஏட்டுக் கல்வியுடன் நாட்டுக் கல்வியும் அரசன் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் நாட்டு மக்களுக்குச் சிறந்த கல்வியைத் தர முடியும் என்பதையும் இங்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அரசன் என்பவன் நாட்டிற்குத் தந்தையாக இருந்து மக்களுக்கு நல்ல கல்வி அறிவைப் புகட்ட வேண்டும் என்பதையும் இங்கே உணர முடிகின்றது. (Subramaniyan, 2007)

### இன்பமும், துன்பமும் ஒன்றென கருதுவதே அறிவுடைமை

அரசன் நாட்டை ஆட்சி செய்கின்ற பொழுது உயர்ந்தோர், உலகோர் எனப்படுவதால் அவர்களுடன் நட்புக் கொண்டு இன்பம், துன்பம் ஆகிய இரண்டையும் ஒரே நிலையாகக் கருதுவதே அறிவுடைமையாகும். இதனை,

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்

கூம்பலும் இல்லது அறிவு"

எனும் குறளின் வழியாக அறிய முடிகின்றது (Parimelalhagar, 2001). இக்குறளில் 'உலகம்' என்பது 'உயர்ந்தோர்' என்னும் பொருளைக் குறிக்கின்றது.

"கோட்டு பூ போல மலர்ந்துபின் கூம்பாது

வேட்டை வேட்டது ஆம் நட்பு ஆட்சி"

கொடியில் முல்லைப் பூ மலரும் மலர்ந்த பின் மடியும் வரை சுருங்காது குளத்தில் பூக்கும். அல்லி, தாமரை ஆகிய பூக்கள் மலர்ந்த வேளையில் மட்டுமே மலர்ந்து இருக்கும் பின்பு கூம்பி விடும். தேவை வந்தபோது மலர்ந்து தேவை முடிந்து போது குவியும் நீர்ப்பூ இயல்புடையார் நட்பைப் போற்றக் கூடாது கோட்டுப்பூப் போன்றோர் நட்பைப் பெற வேண்டும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது (Subramaniyan, 2007).

## திருக்குறளும், புறநானூறும் கூறும் அரசியல் சிந்தனைகள்

வீரம் மிகுந்த அரசாட்சி சிந்தனைகளைத் திருக்குறளிலும் புறநானூறிலும் காண முடிகின்றது.

### அறநெறி தவறாத அரசாட்சி

அறநெறி தவறாமலும் குற்றம் ஏதும் இழைக்காமலும் வீரத்துடனும் மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்கள். அத்தகைய அரசனே நிலைத்த புகழுக்குரியவன். இதனை,

"அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா

மானம் உடைய தரசு"

வழி அறிய முடிகின்றது (Parimelalhagar, 2001). இதே கருத்தைப் புறநானூற்றிலும் காண முடிகின்றது. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் மதுரை மருதனிள நாகனார் பாடிய பாடலில் பாடாண் திணை செவியறிவுறூஉ துறையில் இதே கருத்தைக் காண முடிகின்றது. போர் யானையும், குதிரையும், பெரிய தேரும், வீரமறவர்கள் என நால்வகைப் படைச் சிறப்பும் உடையது அரசு. என்றாலும், அரசின் பெருமை உயர்ந்த அறநெறி வழுவாது வாழ்வதே ஆகும். இதனை,

"நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

அறநெறிக்கு முதன்மை இடத்தைக் கொடுத்து ஆட்சி செய்யும் அரசன் நிலைத்து வாழ்வார். அதுவும் கடற்கரைப் பெருமணல் போல நூறாண்டு வாழ்வான் என்று வாழ்த்திப் பெருமிதம் கொள்ளும் புலவரைக் காண முடிகின்றது (Subramaniyan, 2007).

### கல்வியால் உலகம் இன்புறுவது கண்டு மகிழும் மாண்பு

திருக்குறளில் கல்வி என்னும் அதிகாரத்தில் கல்வியறிவின் பெருமையை உலகிற்கு அறியச் செய்வது மன்னனின் முக்கிய முயற்சியாகும். கல்வி அறிவால் தாம் பெற்ற இன்பத்தால் உலகம் பெறுகின்ற பயனையும் மகிழ்வையும் கண்டு அறிவில் சிறந்த மன்னன் மேலும் அத்தகைய கல்வியைப் பெற விரும்புவான். இதனை,

"தாமின் புறுவது உலகின் புறக் கண்டு

காமுறுவர் கற்றறிந் தார்"

என்னும் குறள் வழியாக அறியமுடிகின்றது (Parimelalhagar, 2001). இதே கருத்தை புறநானூற்றுப் பாடலும் வலியுறுத்துகின்றது. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த புறநானூற்றுப் புலவன் என்

மனைவி நல்லவள் மக்கள் கற்றவர் வேலைக்காரர்கள் என்னோடு ஒத்தவர்கள் நாடாளும் அரசன் நல்லவன் அன்புடையவன் நான் வாழும் ஊரில் இருப்பவர்கள் கற்றவர்கள் நல்லவர்கள் எனக்கு எந்தக் கவலையும் இல்லை, எனக்குத் தலையும் நரைக்கவில்லை என்கிறான். இந்தக் கருத்தை,

"யாண்டுபல வாக, நரையில ஆகுதல்

யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்,

மாண்டஎன் மனைவியோடு, மக்களும் நிரம்பினர்"

எடுத்துரைக்கிறது (Subramaniyan, 2007).

## சிறந்த கல்வி பெற்றுள்ள மன்னவன்

உலகம் இன்புறக் கண்டு வாழும் மாண்பை உடையவனாக திகழ்கின்றான். கற்றறிந்த நல்லோர் வாழும் ஊரில் ஆட்சி செய்யும் மன்னனுக்குப் புகழ் நிலைத்து நிற்கும் என்ற கருத்தைத் திருவள்ளுவர் கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது.

## மக்கட்கு இறையென்று வைக்கப்படும் மன்னவன்

நீதி வழி நடந்து நேர்மை தவறாமல் தன் குடிமக்களைக் காத்து வளர்க்கும் மன்னன் மக்களின் தலைவன் என்று மதித்துப் போற்றப்படுவான். இதனை,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

என்னும் குறள் வழியாக அறியலாம் (Parimelalhagar, 2001). இத்தகைய கருத்தை புறநானூற்றிலும் காண முடிகின்றது. இந்த உலகத்திற்கும் அதில் வாழும் உயிர்களுக்கும் நெல்லும் உண்ணும் உணவும் உயிரல்ல. பருகும் நீரும் உயிர் அல்ல. பின் இந்தப் பரந்த உலகிற்கு உயிர் என்றால் மன்னன் தான். இதனை,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்"

மோசிகீரனார் பொதுவியல் திணையில் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகப் பாடுகிறார். மக்களைக் காக்க வேண்டிய மகத்தான கடமை உடையவன் மன்னவன் அவன் தனிமனித நலன் மக்களின் தலைவன் மக்களுக்கு உயிர் போன்றவன் என்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது (Subramaniyan, 2007).

# திருக்குறளும், பதிற்றுப்பத்தும் கூறும் அரசியல் சிந்தனைகள்

இருபதாம் நூற்றாண்டு சமூக அரசியல் இலக்கிய மாற்றங்களுக்கு சங்கத் தமிழ் நூல்கள் வழிகோலுகின்றன. பதிற்றுப்பத்து என்னும் நூலை 1904-ஆம் ஆண்டு முதன் முதலில் அச்சுக்குக் கொண்டு வந்தார். எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்து என்பது வீரம் செறிந்த நூலாகும். பத்து சேர மன்னர்களைக் குறித்து மிகச் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தோடு திருக்குறளையும் ஒப்பிட்டு அரசியல் சார்ந்த சிந்தனைகளை அறிய முடிகின்றது (Parimelalhagar, 2001).

## உலகைக் காக்கும் மன்னவரை ஆட்சிமுறை காக்கும்

தனது ஆளுகைக்கு உட்பட்ட உலகை எல்லாம் அரசன் காப்பாற்றுகிறான் என்றால் அத்தகைய அரசனையும் கூட நீதிநெறி தவறாது அவன் நடத்துகிற ஆட்சிமுறை உடன் இருந்து காப்பாற்றும் இதனை, செய்தி இறைகாக்கும் வையகம் எல்லாம் என்னும் வழி அறியலாம் (Parimelalhagar, 2001).

## கொடுங்கோல் அரசன் என்ற பெயர் வாங்கக் கூடாது

நாட்டைக் காக்கும் அரசன் நன்மைகளைத் தவிர தீமை செய்தால் கொடுங்கோலன் என்னும் பெயர் வரும். இத்தகைய பெயரை குடிமக்கள் கூறுகின்ற வகையில் மன்னவன் நடந்துகொள்ளக் கூடாது. மக்களின் பழியைத் தேடிக் கொள்ளாத அரசன் நீடுவாழ்வான். மக்களைத் துன்புறுத்தி கொடுங்கோல் அரசன் என்னும் பெயர் பெற்றால் அவன் விரைவில் அழிந்து கெடுவான் என்னும் சிந்தனையை,

"இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்

உறைகடுகி ஒல்லைக் கெடும்"

என்ற குறளின் வழி அறிய முடிகின்றது (Parimelalhagar, 2001).

## திருக்குறளும், நான்மணிக் கடிகையும் கூறும் அரசியல் சிந்தனைகள்

நான்மணிக் கடிகையில் மன்னவரை நாட்டு மக்கள் நல்லவன் என்று கூறும்படியாக மன்னன் ஆட்சி செய்ய வேண்டும் என்னும் கருத்து உள்ளது.

"மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர் ஒருவன்

வினைக்கு ஆக்கஞ் செவ்வியன் ஆதல் சினச் செவ்வேல்,

நாட்டாக்க நல்லன் இவ்வேந்தன்றல்-கேட்டாக்கம்

கேளிர் ஒரீஇ விடல்"

என்ற பாடல் வழியாக அறியமுடிகிறது (Subramaniyan, 2007). அதாவது பெருமைமிக்க மனைவியால் குடும்பத்திற்கு நலம். ஒருவன் செம்மையானவனாக இருந்தால் அவன் செயலுக்கு நலம். பகை மேல் சென்று வெல்லும் வேல் உடைய வேந்தனுக்கு என் வேந்தன் நலன் எனும் பெயர் நாட்டு மக்கள் கூறுதல் நலம். உறவினரை நீங்கி விடுதல் கெட்டுப்போதலுக்கு நலம். இதே கருத்தை திருக்குறளில் தெரிந்து வினையாடல் என்னும் அதிகாரத்தில் கீழ்காணும் குறள் வழியாக அறியலாம்.

"அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்

நன்குடையான் கட்கே தெளிவு" (Parimelalhagar, 2001)

## முடிவுரை

பண்டைய தமிழர்களின் அரசியல் வரலாற்றை அறிவதற்கு திருக்குறள் நன்கு பயன்படுகிறது. நவீன அரசியலுக்குப் புதிய சிந்தனைகளை வழங்குவதும் திருக்குறளின் பணியாக இருக்கின்றது. முக்காலத்தையும் உணர்ந்து எக்காலத்துக்கும் தகுந்த அரசியல் வழிகாட்டுதலை திருவள்ளுவர் கூறியுள்ளார். திருக்குறளை மையமாகக் கொண்டு செவ்வியல் இலக்கியங்கள் முழுவதுமாக ஒப்பிட்டுப் பார்க்கும் ஆய்வு புதுமை படைக்கும். அவ்வகையில் இவ்வாய்வு அதற்கு முன்னோடியாகத் திகழும். அரசியல் என்றால் என்ன அரசியலின் வகைகள் எத்தனை அரசனின் கொடை சிறப்பு, படைச் சிறப்பு, அமைச்சர்களின் ஆளுமைப் பண்புகள் ஆகியவற்றைச் சங்கத்தமிழ் பிற நூல்களுடன் ஒப்பிட்டு பார்க்கின்ற பொழுது அரிய கருத்துக்கள் நமக்குக் கிடைக்கின்றன. அரசன் தனக்கும் தன் நாட்டிற்கும் தூங்காமை கல்வி கல்வியின் வழியாக சிறந்த அறிவை வழங்க வேண்டும். பல்வேறு நூல்களைக் கற்கின்ற திறமை படைத்தவராக அரசு திகழ வேண்டும். நாட்டில் வழங்கும் கல்வியை அழிவில்லாத செல்வமாக கருத வேண்டும். நாட்டை ஆளும் அரசன் இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதவேண்டும். உலகத்தை இன்புறச் செய்து தானும் இன்புற்று வாழும் மன்னவன் நிலைத்த புகழுக்கு உரியவன். தன்னையும் தன்னைச் சார்ந்து உள்ளவர்களையும் காத்து இந்த மண்ணைக் காக்கும் மாண்பு உடையவராக மன்னவன் விளங்க வேண்டும். நிலைத்த செல்வம் மிக்க படைகளை வளர்க்க வேண்டும். அன்புடையவர் களுக்கு பாதுகாப்பு தரவேண்டும். பல்வேறு பாதுகாப்பு முறைகளைக் கொண்டு

உலகத்தைக் காக்கின்ற அரசனை அவன் செய்யும் ஆட்சிமுறையே அவனைக் காக்கும். திருக்குறள் நாலடியார் நான்மணிக்கடிகை பதிற்றுப்பத்து திரிகடுகம் தொல்காப்பியம் போன்ற பல்வேறு நூல்களில் உள்ள அரசியல் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்பொழுது புதியதோர் அரசியல் உலகைக் காண முடிகிறது.

## References

Subramaniyan, Sa.V. (2007) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

Parimelalhagar, (2001) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License